# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2077/46 - 2018 ජුනි මස 29 වැනි සිකුරාදා - 2018.06.29

*2077/46 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்க அறிவித்தல்**

*(திருத்தப்பட்டவாறான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 101(1) ஆம் பிரிவின் கீழ் (235 ஆம் அத்தியாயம்) எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், மங்கள சமரவீர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் என்ற வகையில் ஈ வர்த்தக தளத்தின் ஊடாக வியாபாரத்தில் இருந்து நுகர்வோர் வரை கொடுக்கல் வாங்கல்களை நிறுவகிக்கும் நோக்கத்திற்காக இத்தால் கட்டளை இடப்படுகிறது. இக்கட்டளை 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, யூன் 29.*

*ஒழுங்குவிதிகள்*

*இந்த ஒழுங்குவிதியானது வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் ஒழுங்குவிதியாக அழைக்கப்படுகின்ற அதேவேளையில் 2018, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.*

*2. வலையமைப்பு அல்லது ஏனைய இணைய வழி வர்த்தக தளமொன்றினூடாகப் பின்வரும் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை கொடுக்கல் வாங்கல் முறையொன்றை ஒழுங்குபடுத்துவது இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கமாகும் :*

*(அ) முதலீட்டுச் சபையின் மூலம் அனுமதிக்கப்பட்ட கேந்திர நிலைய தொழில் முயற்சிகளினால்* (Hub Enterprises) *மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் செயற்பாடுகள் ;*

*(ஆ) மேலே (அ) இன் கீழான தொழில் முயற்சிகள் தவிர்ந்த முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் செயற்பாடுகள் ;*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) ஏனைய பதிவு செய்யப்பட்டுள்ள வியாபார தொழில் முயற்சிகளினால் மேற்கொள்ளப்படுகின்ற வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் செயற்பாடுகள் ;

(ஈ) ஏனைய ஏற்றுமதியாளராகிய தனிநபரினால் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் செயற்பாடுகள்.

2.1 மேலே 2 (அ) முதல் 2 (ஈ) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் வியாபாரத்தின்/செயற்பாடுகளின் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளருக்கு/நபர்களுக்கு வசதிகளை வழங்குவதற்கான சாதாரண ஏற்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகள்.

(i) ஈ வர்த்தக தளத்தினூடாக பொருட்களுக்கான கட்டளை ஒன்று கிடைத்ததன் பின்னர் தொடர்புடைய தொழில் முயற்சியாளர்களினால் பொருட்களைக் கொண்டு வந்து பொதி செய்து அவற்றை உரிய விதத்தில் களஞ்சிய முகாமைத்துவ தொகுதியில் இருந்து அல்லது கையிருப்பு முகாமைத்துவத் தொகுதியில் உள்ள கையிருப்பிலிருந்து அல்லது பொருட் பதிவேட்டு முகாமைத்துவ தொகுதியிலிருந்து கழித்தல் வேண்டும் ;

(ii) வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரையான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதியாளராகிய தனிநபர் உட்பட தொடர்புடைய தொழில் முயற்சியாளர்களினால் மேற்கூறிய பொருட்களை கப்பல் ஏற்றுவதற்கு முன்னர்,

(அ) கப்பற்சரக்கு கையிருப்பிலுள்ள சரியான தகவல்கள் உட்பட விசேட தொடர் இலக்கத்தைக் கொண்ட (AMW இலக்கம்) கூரியர் விமானப்பயணம் விலைப்பட்டியல் மற்றும் பொருட்களைப் பொறுப்பேற்க வேண்டிய நபர் ; அத்துடன்

(ஆ) மேற்கூறிய பொருட்களின் ஏற்றுமதிக்கான விலைப்பட்டியலைத் தயாரித்தல் வேண்டும்.

(iii) அதிகாரம்பெற்ற கூரியர் முகவர் நிலையத்தினால்/கம்பனியினால் தொடர்புடைய தொழில் முயற்சி வளவிலிருந்து மேற்கூறிய பொதியை பெற்றுக்கொள்ள வேண்டிய அதே வேளையில் GSM தொழில்நுட்பத்தினூடாக அதே நேரத்தில் தொழில்படுகின்ற கூரியர் முகவர் நிலையத்தில் அல்லது கம்பனியில் முகாமைத்துவத் தொகுதிக்கு சேர்க்க வேண்டிய AWM இலக்கத்தை ஊடு கதிர்படமாக்குதல் (Scan) வேண்டும் ;

(iv) ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தினுள் அமைந்துள்ள கேந்திர நிலைய தொழில் முயற்சி உட்பட முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளினால் பதிவுசெய்யப்பட்ட கூரியர் முகவர் நிலையத்தின்/கம்பனி ஊடாக வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை என்பதை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கான நேரடி இணையவழி அனுமதிப்பத்திரங்களை (03) தயாரித்தல் வேண்டும் ;

(v) தொடர்புடைய நிறுவனம் மேற்கூறிய அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்க வேண்டிய அதே வேளையில் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தினதும் பிரதியொன்றை இலங்கை சுங்கத்திற்கும் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை வியாபார/செயற்பாடுகளின் கீழ் மேற்கூறிய கூரியர் முகவர் நிலையத்தின்/கம்பனியின் ஊடாக ஏற்றுமதிக்காக பொருட்களைக் கொண்டுசெல்லும் சந்தர்ப்பத்தில் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் பெயர் குறிப்பிடப்பட்ட வெளியேறும் நுழைவாயிலுக்குப் பொறுப்பான முதலீட்டு வலய உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு செய்த போதிலும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் நுழைவாயில் அனுமதிப்பத்திரத்தைக் கையினால் வழங்கும் முறைமை 2019, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

(vi) ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களுக்கு வெளியில் அமைந்துள்ள முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் உட்பட கேந்திர நிலைய தொழில் முயற்சிகளை கவனத்தில் கொள்ளும்போது தொடர்புடைய தொழில் முயற்சி வெளியேறும் நுழைவாயிலில் வைத்துக்கொள்ள வேண்டிய தனி அனுமதிப்பத்திரத்தை உருவாக்குதல் வேண்டும் ;

(vii) தொடர்புடைய தொழில் முயற்சிகளினால் ஏற்றுமதியொன்றை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை வியாபாரங்களின்/செயற்பாடுகளின் ஊடாக அனுப்பப்படுகின்ற கூரியர் கப்பற்சரக்கு கையிருப்புக்காக சுங்கத் திணைக்களத்தின் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவை இல்லாதபோதிலும் சகல மாதங்களின் இறுதியிலும் தொடர்புடைய தொழில் முயற்சியாளரினால் பதிவு செய்யப்பட்ட கூரியர் முகவர் நிலையத்தின்/கம்பனி ஊடாக வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை எனும் செயற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மாதாந்த ஏற்றுமதியின் சாராம்சத்தை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் ASYCUDA கணினித் தொகுதிக்காகவும் மொத்த பொருட்களின் கையிருப்புக்காக CusDec சமர்ப்பித்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட நிறுவனம் CusDec நாடுகளாக வெவ்வேறாக தயாரித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக மேலே 2 (ஈ) இல் உள்ள ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்டுள்ள தனிநபர் தொழில் முயற்சிகளைக் கவனத்தில் கொள்ளும் போது சகல மாதங்களினதும் இறுதியில் தொடர்புடைய தனிநபர் தொழில்

முயற்சியாளரினால் மேற்கூறிய கூரியர் முகவர் நிலையத்தின்/கம்பனியின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற மாதாந்த ஏற்றுமதிகளின் சுருக்கத்தை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் Asycuda கணினித் தொகுதிக்கு மொத்தப் பொருட்களின் கையிருப்புக்காக CusDec சமர்ப்பித்தல் வேண்டும் ;

(viii) கூரியர் முகவர் நிலையத்தினால்/கம்பனியினால் பெயர் குறிப்பிடப்பட்ட கணக்கின் ஊடாக மாத்திரம் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை வியாபாரத்திற்காக/செயற்பாடுகளுக்காக இடமளிக்கப்படுகின்ற அதே வேளையில் மேற்கூறிய தொழில் முயற்சியாளர்களுக்காக தனிநபர் ஏற்றுமதியாளருக்காக கூரியர் விலைப்பட்டியல் மற்றும் பொருட்களின் விபரங்களைக் குறிப்பிட்டு மாதாந்த சாராம்ச அறிக்கையில் டிஜிட்டல் என கையொப்பமிடப்பட்ட மென்பொருளின் பிரதியொன்றை இலங்கை முதலீட்டுச் சபைக்கும் இலங்கைச் சுங்கத் திணைக்களததிற்கும் சமர்ப்பித்தல் வேண்டும். கூரியர் முகவர் நிலையத்தினால்/கம்பனியினால் 05 வருடங்களுக்கு வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை ஏற்றுமதி விபரங்களை அவர்களின் தொகுதியில் வைத்திருக்க வேண்டிய அதே வேளையில் கேட்கப்படும் பட்சத்தில் இலங்கைச் சுங்கத் திணைக்களத்திற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் மேற்கூறிய தகவல்களை வழங்குதல் வேண்டும்.

2.2 கீழே காட்டப்பட்டுள்ள விசேட தொழில் முயற்சிகள் அல்லது நிறுவனங்கள் தொடர்பில் பின்வரும் விசேட ஒழுங்கு விதிகள் ஏற்புடையதாகும் :

(அ) வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளில்/வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள கேந்திர நிலைய தொழில் முயற்சியாளர்களிடம் சொந்தமான களஞ்சிய முகாமைத்துவ தொகுதி இருத்தல் வேண்டும்.

(ஆ) வியாபாரத்தலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளில்/வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபை தொழில் முயற்சியாளர்களுக்கு அவர்களுக்குச் சொந்தமான களஞ்சிய முகாமைத்துவத் தொகுதி அல்லது பொருட்பதிவேட்டு முகாமைத்துவ தொகுதி இருத்தல் வேண்டும்.

3. பின்வருபவர்களில் வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளுக்கான/வியாபாரங்களுக்கான வசதிகளை வழங்குவதற்கு தொடர்புடைய திணைக்களத்தின் கட்டளைகளுடன் (DOPL) இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினால் விசேட சுங்க நடவடிக்கை முறை குறியீட்டு இலக்கம் மூன்றினை வெளியிடுதல் வேண்டும் :

(அ) கேந்திர நிலைய தொழில் முயற்சியாளர்கள் (Hub Operators) ;

(ஆ) முதலீட்டுச் சபை தொழில் முயற்சியாளர்கள் ;

(இ) உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தனிநபர் ஏற்றுமதியாளர்கள்.

3.1 சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) "பீ" அட்டவணையில் உள்ள அசைவுகள் மற்றும் வியாபாரங்கள் தடைசெய்யப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட பொருட்களை வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளின்/வியாபாரத்தின் ஊடாக வர்த்தகம் செய்தல் கூடாது.

3.2 பொருட்களின் கையிருப்பு பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 3,000 இற்குக் கூடுதலான பெறுமதியைக் கொண்ட பொருட்களை வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளின்/வியாபாரத்தின் ஊடாக வர்த்தகம் செய்தல் கூடாது.

3.3 வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளை/வியாபாரத்தினை மோசடியாக பயன்படுத்துவாராயின் சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கு (235 ஆம் அத்தியாயம்) இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3.4 வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளைக் கூட்டிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பன சுங்கப் பணிப்பாளரின் (கைத்தொழில் மற்றும் சேவைகள்) கீழ் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருப்பினும், மேலே 2 (அ) மற்றும் 2 (ஆ) ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ள வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை செயற்பாடுகளில் இலங்கை முதலீட்டுச் சபையை இலங்கைச் சுங்கத் திணைக்களத்தினுடன் கூட்டிணைத்து வசதிளை வழங்குதல் வேண்டும்.

4. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக-

(அ) "வியாபாரத்திலிருந்து நுகர்வோர் வரை" எனும் இந்த ஒழுங்குவிதிகளின் 2(ஆ) முதல் (ஈ) வரை அடையாளம் காணப்பட்டுள்ள யாரேனும் ஒரு நபர் மற்றும் இதன் இறுதி பயனாளி ஆகிய பிரிதொரு நாட்டின்/நாடுகளின் நுகர்வோர்களுக்கிடையில் நேரடியாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் ஆகும்.

(ஆ) "கேந்திர நிலைய தொழில் முயற்சிகள்" என்பது இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள அல்லது கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளதும் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டதுமான 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் வர்த்தக கேந்திர நிலைய ஒழுங்கு விதிகளில் காட்டப்பட்டுள்ள வியாபாரச் செயற்பாடுகள் ஒன்று அல்லது ஒன்றுக்குக் கூடுதலான எண்ணிக்கையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சிகள் ஆகும்.

(இ) "முதலீட்டுச் சபை முயற்சிகள்" என்பது மேலே (ஆ) இன்கீழ் காட்டப்பட்டுள்ள கேந்திர நிலைய தொழில் முயற்சிகள் தவிர்ந்த காலத்திற்குக் காலம் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டு இருக்கும் தொழில் முயற்சிகள் ஆகும்.

(ஈ) "ஏனைய ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகள்" என்பது முழுமையான உரிமை (Sole Propietorship) உட்பட கம்பனிச் செயலகத்தின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள மேலே (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் தவிர்ந்த ஏனைய கம்பனிகள் ஆகும்.

(உ) "தனிநபர் ஏற்றுமதியாளர்" என்பது இலங்கையில் உள்ள சாதாரண நபர் ஆகும்.

*08-119*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.